DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No.** 100/2022

| | | |
|---|---|---|
| Name | : | திரு. ராஜமாணிக்கம் **Rw4** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12th day of February 2025.

**முதல் விசாரணை**

நான் சங்கரன்கோவில் அருகே நாலுவாசல்கோட்டை என்ற ஊரில் வசித்து வருகிறேன், பஞ்சர் கடை நடத்தி வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் இன்று சாட்சியம்அளிக்க வந்துள்ளேன். TN-79-H-3557 பதிவெண் கொண்ட ஆட்டோ எனக்கு சொந்தமானது. கடந்த 20.07.2021 அன்று விபத்து ஏற்பட்ட சமயம் ஆட்டோ எனது பெயரில் தான் இருந்தது. ஆட்டோவை ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்திய சங்கர் எனது மகன். அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடு கோரி MCOP No.100/2022 என்ற வழக்கை தாக்கல் செய்து இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். விபத்தில் காயம்பட்ட சொக்கலிங்கம் என்பவர் எனது மைத்துனர், அவரும் தனியே ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி வழக்குகளில் என்னை 3ம் எதிர்மனுதாரராக கட்சி சேர்த்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நீதிமன்றத்திலிருந்து இதுசம்பந்தமாக எந்த அழைப்பாணையும் எனக்கு இதற்கு முன்னர் வந்ததில்லை. நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை பெற்றும், நான் ஆஜராகாமல் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டேன் என்றால் சரியல்ல.

எனது மகன் எனக்கு சொந்தமான ஆட்டோவை ஓட்டி செல்வதற்கு நான் எழுத்துப்பூர்வமாக எந்த அனுமதியும் வழங்கவில்லை, வாய்மொழியாக சொன்னதன் அடிப்படையில் என் மகன் ஆட்டோவை ஓட்டி சென்றார். அவருக்கு தினசரி ரூபாய் 300/– மற்றும் மாதந்தோறும் ரூ.3300/–ம் சம்பளமாக கொடுத்துவந்தேன். அதற்கு எந்தவொரு ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும் சங்கரும் தந்தை – மகன் என்பதால் எங்களுக்கிடையே முதலாளி – தொழிலாளி உறவுமுறை கிடையாது என்றால் சரியல்ல. சங்கருக்கு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதற்காக நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு என்னுடைய மகனின் கவனக்குறைவு காரணம் கிடையாது, முன்னால் ஓட்டி சென்ற லாரி ஓட்டுநரின் கவனக்குறைவு தான் காரணம்.

**மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சமயம் சங்கர் என்னிடம் தான் வேலை பார்த்தார் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi